# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 6th Term Examination - 2021

FWC

| | | | |
|---|---|---|---|
| தமிழ் I<br>Tamil I | Three hours<br>Gr -13 (2021) | 72 | T | I |

**மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்**

❖ **பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும், எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**பகுதி – I**

1) மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ) கன்றுதன் பயமுலை மாந்த முன்றிற்
றினைபிடி யுண்ணும் பெருங்கல் நாட
கெட்டிடத் துவந்த உதவி கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல,
நன்றி மறந்தமையாயின், மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்னவிவள்
ஒலிமென் கூந்த லுரியவால் நினக்கே.

1) இச்செய்யுளில் தோழியின் மதிநுட்பம் வெளிப்படுமாற்றினை விளக்குக.
2) இச்செய்யுளில் கையாளப்பட்டுள்ள உவமைகளை இனங்கண்டு அவற்றின் சிறப்பினை விளக்குக.
3) இச்செய்யுளினூடாகப் புலப்படும் சங்ககால அகத்திணைப் பண்புகளை விளக்குக.

(12 புள்ளிகள்)

ஆ) அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகனும்
அவளும் துஞ்ச
வில்லை ஊன்றிய கையோடும் வெய்து
உயிர்ப்போடும் வீரன்
கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய்
கண்கள் நீர் சொரியக் கங்குல்
எல்லை காண்பு அளவும் நின்றான்
இமைப்பிலன் நயனம் என்றான்.

1) இப்பாடல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தை விளக்குக.
2) இங்கு கையாளப்பட்டுள்ள அணிகளை இனங்கண்டு விளக்குக.
3) இலக்குவன் இராமன் மீது கொண்ட பாசம் எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகிறது?

(24 புள்ளிகள்)

2) அ) பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

ஆ) பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ) ஏதோ அவதியிலே ஏகுகிறீர்,
ஏனப்பா,
நீர் தாம் உலகு நிலை மாறிப்
பாதாளத்
தாழ விழாமல் அதன் வாழ்வைக் காப்பவரோ?
வாழி, என் தாழ்மை வணக்கங்கள்!

ஆள் சுருளும்
வெயிலிலே
நீர்போகும் வீதிநடைப் பாதையிலே
உய்யும் வகை தெரியா ஓர் மனிதன்
கை இல்லான்.
தூங்குகின்றான் போலக் கிடக்கின்றான்
துன்புறுத்தி
வீங்கும் பசியாலே விழுந்தானோ!
ஆங்கயலிற்
கொத்தவரும் காகத்தைப் பாரும்
குறை உயிரோ
செத்த உடலோ – தெளிவில்லை

சற்றெனினும்
நில்லாது, நெஞ்சில் நெகிழ்வேதும் காணாது,
சில்லறையில் ஒன்றைச் செருக்கோடு
செல்லுங்கால்
வீசி விடுதல் விரும்பினீர்;
வேண்டாம், ஓய்
கூசும் அவமதிக்கும் கொள்கையேன்?

ஆசை மிக
ஆதலினால், காசு கணீரென்றிட அதிரும்
காதுடையான்;
அன்னோன் கடுந்தூக்கம்
பாதியிலே
கெட்டுவிடக் கூடும்,
கெடுக்காதீர், பாவம், இம்
மட்டும் புவியை மறந்திருந்தான்.

கிட்டப்போய்
மெல்லக் குனிந்து இடுக
இல்லையெனில் உம்பாட்டில்
செல்க
இதுவே சிறப்பு

அ) நடைபாதையில் கிடக்கும் மனிதனின் அவலநிலை சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.
ஆ) கவிஞர் வெளிப்படுத்த விழைந்த விடயம் யாது?
இ) தனது கருத்தை வெளிப்படுத்த கவிஞர் கையாண்ட உத்திகளை விளக்குக.
ஈ) சில்லறையில் ஒன்றைச் செருக்கோடு செல்லுங்கால் வீசி விடுதல் விரும்பினீர்.
என்ற அடிகளினூடாக நீர் விளங்கிக் கொள்வது யாது? *(16 புள்ளிகள்)*

**அல்லது**

ஆ) இன்று வருடப் பிறப்பு – முதன் முதலில் இந்த எண்ணம்தான் முகத்தாருக்கு ஏற்படுகின்றது. எத்தனையோ வருடப் பிறப்புகள் வந்து போய்விட்டன. அவற்றுள் எத்தனையோ வருடங்களும் ஓடி மறைந்துவிட்டன. பார்வதிப் பிள்ளையைக் கல்யாணம் செய்த முதல் வருடம் வந்த வருடப்பிறப்பு. இராமேசுவர நேர்த்திக் கடனுக்குப் பிறகு சுப்பிரமணியனைப் பெற்று முருகண்டியிலே மயிர்நீக்கக்கடன் செய்த மறுநாள் வந்த வருடப்பிறப்பு சௌந்தரம் கல்யாணமாகி மருமகனுடன் வந்த வருடப்பிறப்பு – தகப்பனுக்குத் தலைக்கொள்ளி வைத்து, கோடிகட்டாதே கழிந்த வருடப்பிறப்பு, பார்வதிப்பிள்ளை போய் நாளே காடாகிக் கிடந்த வருடப்பிறப்பு - இப்படிப் பல கால ஓட்டம் அவர்தம் உழைப்பை விழுங்கி, உடலைச் சருகாக்கிவிட்டது. முன்னர் போலச் சுறுசுறுப்பில்லை. நல்லெண்ணெயில் வெதுப்பிய கத்தரிக்காயுடன் மூன்று நீற்றுப்பெட்டி பிட்டுச் சாப்பிட்டும் நாலு மரவள்ளிக் கிழங்கைச் சுட்டுப் பச்சை மிளகாய் சகிதம் போட்டுக் கொண்டாற்றான் காலைப்பசி அடங்கும். என்பன இளமைப் பருவ நினைவுகள். பிள்ளைகளைப் படிக்க வைத்து உத்தியோகக்காரராக்கியதினால் இரண்டு பாண் துண்டுகளைக் கொறிக்கும் பழக்கம் முகத்தார் வீட்டிலும் பரவிவிட்டது. படுத்த படுக்கையாக வைக்கும் படியாக உடம்பிற்கு அப்படியொன்றுமில்லை. முதுமை உணர்வு வலுக்கின்றது. சிறிது வாதக்குணம் போன்ற எண்ணமும் மேலிருக்கின்றது. திடீரெனக் குந்தி எழும்பச் சிரமப்படுகின்றார். இதனைப் பிள்ளைகள் அறிந்து கொள்ளாத வகையில் நடந்து கொள்கின்றார். கடைக்குட்டி மகளைப் பற்றித்தான் கொஞ்சம் கவலை திண்ணையிற் குந்தி கப்புடன் சாய்ந்து கொள்கின்றார்.

அவள் பொடிச்சிதான் பாவம். தாயத் தின்னியாப் போயிட்டுது. படிப்பை முடிச்சுப்போட்டு. மூலையிலே கிடந்து பெருமூச்சு விடுகுது. அவளை மேலே படிக்க வைக்கலாமெண்டு மூத்ததுகள் விரும்பினதுதான். வேணுமெண்டால், உதுகளின்ரை பெம்பிளைப் பிள்ளையள் படிச்சு உத்தியோகம் பாக்கட்டும். இளையவனின்ரை பாடு பிழையில்லை. ஒரு மாதிரி ஒரு வேலையிலை கொழுவிட்டான். ஏதோ கொம்பணியிலைதான் வேலையாம். ஆனா சம்பளம் புழையில்லை. மேலுக்கு நல்ல வரலாமெண்டு மூத்தவனும் மச்சான்மாரும் சொன்னாங்கள் அவன் கடைக்குட்டி எண்டு வீட்டோடை இருந்து சாப்பிட்டுப் பழகியவன். மூண்டு நாலு மாசம் அதுவுமில்லை. கயிற்றப்பட்டு வாழ்ந்தால் தானே, பேந்து பின்னடிக்குத் தங்கடை பாடுகளைத் தாங்களே பாக்குங்கள். நல்லூரான்ரை புண்ணியத்திலை எல்லாம் தங்கடை சீவியப்பாடுகளைப் பார்க்கக்கூடிய நிலைக்கு வந்துட்டுதுகள் என்ரை கெட்டித்தனம் என்ன இருக்கு? ஆண்டவன் அளந்தபடி நடக்குது.

1) வருடப்பிறப்பையொட்டி முகத்தாரின் உள்ளத்தில் பழைய நினைவுகள் மீட்கப்படுமாற்றை விளக்குக.
2) உணவுப் பழக்கவழக்கங்களில் ஏற்பட்ட மாற்றம் பற்றிய முகத்தாரின் உணர்வு வெளிப்படுமாற்றை விளக்குக.
3) 'கடைக்குட்டிப்பெண்' பற்றிய முகத்தாரின் ஆதங்கம் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது.
4) ஆசிரியரின் மொழிநடையை மதிப்பிடுக.

(16 புள்ளிகள்)

## பகுதி – II

3) வலி அறிதல் என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியனவற்றை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்துக.
அ) வலியின் பகுதியும் அதனை அறிந்து மேற்கொள்ளக்கூடியவர் அடையும் பயனும்.
ஆ) தன்வலி அறியா வழிப்படும் இழுக்கு
இ) பொருள் வலியறிதலின் சிறப்பு.
ஈ) கையாளப்பட்டுள்ள அணிகள். (20 புள்ளிகள்)

4) குகப்படலத்தில் குகனது கட்டளையால் பல நாவாய்கள் வந்தது முதல் ஏறிய சேனைகளை இறக்கிவிட்டு நாவாய்கள் மீண்டது வரையுள்ள பகுதியில்.
அ) நாவாய்களின் தோற்றம்
ஆ) நீந்திச் சென்ற யானைகளின் தோற்றம்
இ) நாவாய்களிற் சென்ற தேர்கள்
ஈ) நாவாய்களிற் சென்ற குதிரைகள்
என்பன வருணிக்கப்படுமாற்றை விளக்குக. (20 புள்ளிகள்)

5) பேராசியர் க. கைலாசபதியின் 'மானுடம் தழுவிய கவிஞர்கள்' என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
அ) மகாகவிகள் பற்றிய கட்டுரையாசிரியரின் வரையறை
ஆ) வள்ளுவர், கம்பன், இளங்கோ, பாரதி ஆகியோர் மகாகவிகள் என மதிக்கப்படுவதற்கு ஆசிரியர் கூறும் காரணங்கள்.
இ) பாரதியார் பற்றிய கட்டுரையாசிரியரின் மதிப்பீடு (20 புள்ளிகள்)

6) ந.பிச்சமூர்த்தியின் 'நெருக்கடி' என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு.
அ) சரவணமுத்துவின் வறுமைநிலை
ஆ) மனிதனின் எண்ணங்களையும் நடத்தைகளையும் விபரிப்பதற்கு விலங்குகளும் தாவரங்களும் கையாளப்பட்டிருக்கும் திறம்.
இ) ஆசிரியரின் மொழிநடை என்பன பற்றி விளக்குக. (20 புள்ளிகள்)

7) ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது என்ற நாவலில்.
அ) கிராமத்து மக்களின் ஏழ்மையும் உழைப்பும்.
ஆ) பெண்களது கல்வி முன்னேற்றத்தில் ஆசிரியர் கொண்ட அக்கறை.
இ) கிராமத்தை விழிப்படையச் செய்வதில் ஆசிரியர் கொண்ட ஆர்வம்.
என்பன வெளிப்படுத்தப்படுமாற்றை விளக்குக. (20 புள்ளிகள்)

8) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.
அ) சிலப்பதிகாரம் ஊர்காண் காதையில் கவுந்தியடிகளின் அறிவுரை வெளிப்படுமாறு
ஆ) கோயில் திருப்பதிகத்தில் மாணிக்கவாசகரின் புலமைத்திறன் வெளிப்படுமாறு
இ) தேம்பாவணி காட்சிப்படலத்தில் இயேசுவின் பெருமைகள் எடுத்துரைக்கப்படுமாறு
ஈ) காரணமாலையில் புலவரின் கவிதைச் சிறப்பு வெளிப்படுமாறு.
உ) 'எல்லாம் உமதே' என்ற கவிதையில் உழைப்பாளியின் அவலநிலை சித்திரிக்கப்படுமாறு.

(20 புள்ளிகள்)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2021
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 6th Term Examination - 2021

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ் II<br>Tamil II | Three Hours<br>Gr -13 (2021) | 72 | T | II |

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்

- **பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

### பகுதி – I

1) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. பின்வருவனவற்றுள் மூக்கொலி இடம்பெறும் சொல்
   1) பச்சை 2) சங்கு 3) செய்தி 4) பல்துறை 5) தோல்வி

2. பின்வருவனவற்றுள் உயிர்த்தொடர்க் குற்றியலுகரமாக அமைவது
   1) ஐந்து 2) தூது 3) அன்பு 4) புரியாது 5) யாது

3. தற்காலத் தமிழில் சொல்லின் இறுதியில் இடம்பெறாத எழுத்துக்களின் தொகுதி.
   1) எ ஒ ஓ 2) எ ஏ ஐ 3) ஈ ஏ ஐ 4) ஈ உ ஊ 5) எ ஒ ஔ

4. உடனிலை மெய்ம்மயக்கம் இடம்பெறும் சொல்.
   1) தண்ணீர் 2) நன்றி 3) கல்வி 4) தாய்மை 5) பார்வை

5. கண்டான் என்பதன் பகுதி
   1) கண் 2) காண் 3) கண்டு 4) கண்ட 5) காட்சி

6. நேற்று வந்தவள் எனது நண்பி என்பதில் வந்தவள் என்பது.
   1) வினைச்சொல் 2) தொழிற்பெயர் 3) வினையாலணையும் பெயர்
   4) எச்சவினை 5) முற்றுவினை

7. மாணவர்களுக்கு உரியது நல்லொழுக்கம் என்பதில் ‘கு’ உணர்த்தும் பொருள்.
   1) கொடை 2) பகை 3) நட்பு 4) முறை 5) தகுதி

8. இன்று பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவருமோ என்பதில் வந்துள்ள ‘ஓ’கார இடைச்சொல் தரும் பொருள்.
   1) வினா 2) ஐயம் 3) தெரிநிலை 4) எதிர்மறை 5) மிகை

9. மழை பெய்யின் நிலம் நனையும் என்பது.
   1) காரியப்பொருள் 2) எச்சப்பொருள் 3) நிபந்தனைப்பொருள்
   4) கருவிப்பொருள் 5) கருத்தாப்பொருள்

10. திருவாசகம் ஓதினான் என்பதில் வந்துள்ள ஆகுபெயர்.
    1) சொல்லாகுபெயர் 2) கருவியாகுபெயர் 3) கருத்தாவாகுபெயர்
    4) காரியவாகுபெயர் 5) பொருளாகுபெயர்.

11. உடம்படுமெய் தோன்றிப் புணர்ந்த சொல்.
    1) சொல்லை 2) படிப்பை 3) அவற்றை 4) பூவை 5) மரத்தை

12. பின்வருவனவற்றுள் உயிர்முன் உயிர் புணர்தலுக்கு உதாரணமாக அமைவது.
1) பூவிதழ் 2) கடற்கரை 3) கனவுக்கூடம் 4)தீராப்பசி 5) பட்டுச்சேலை

13. சேரனும் சோழனும் பாண்டியனும் தமிழ்நாட்டை ஆண்டனர் என்பதில் வந்துள்ள 'உம்' இடைச் சொல் தரும் பொருள்.
1) ஐயப்பொருள் 2) எண்ணுப்பொருள் 3) எதிர்மறைப்பொருள்
4) முற்றுப்பொருள் 5) ஆக்கப்பொருள்

14. மற்றொன்று என்பது
1) இடைச்சொற்றொடர் 2) வினையெச்சத் தொடர் 3) பெயரெச்சத் தொடர்
4) உரிச்சொற்றொடர் 5) வினைமுற்றுத் தொடர்

15. பின்வருவனவற்றுள் 'இ'கரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்.
1) இனிமை 2) இவர் 3) நிலம் 4) இலை 5) இறகு

16. பின்வருவனற்றுள் காரண இடுகுறிப்பெயராக அமைவது.
1) பறவை 2) கடல் 3) சோறு 4) பொன்னன் 5) முள்ளி

17. நான் தந்தியடித்தேன் என்பதில் தந்தியடி என்பது
1) ஏவல்வினை 2) கூட்டுவினை 3) பிறவினை 4) துணைவினை 5) காரணவினை

18. பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயர் விகுதிகள்
1) இயல், சாலி 2) இய, இயர் 3) கு, டு 4) மின், மார் 5) அன், ஆன்

19. பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினையாகவும் குன்றாத வினையாகவும் வரும் வினையடி.
1) முறி 2) சிரி 3) வா 4) பார் 5) நட

20. மகா வித்துவான் பிள்ளை அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று நான் அவரைக் கேட்டேன் என்பது.
1) கூட்டுவாக்கியம் 2) கலப்பு வாக்கியம் 3) வினா வாக்கியம்
4) தனி வாக்கியம் 5) எதிர்மறை வாக்கியம்

(20 புள்ளிகள்)

## பகுதி II

2) அ) பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த உரைநடையாசிரியர்களுள் சிவஞானசுவாமிகள் ஒப்புயர்வற்று விளங்கியது போலவே, பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆறுமுகநாவலர் சிறப்புற்று விளங்கினார். தமிழ்மொழி வளர்ச்சிக்கு உரைநடை விருத்தி அவசியமென்று வற்புறுத்தியவர்களுள் ஆறுமுகநாவலரும் ஒருவர். கிறிஸ்தவ மதப் பிரசாரத்தினால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவசமயத்துக்கு ஏற்பட்ட தளர்ச்சியை நீக்கிய நாவலர் பெருந்தகை தமிழ்மொழியை வளர்ப்பதற்குப் பல முயற்சிகளைச் செய்துள்ளார். சென்னையிலே அச்சியந்திரசாலை ஒன்றை அமைத்துப் பல தமிழ் நூல்களைத் திருந்திய முறையில் பிழையறப் பதிப்பித்து உதவினார். எடுத்துக் கொண்ட காரியம் எதனையும் சோர்வின்றித் திருத்தமாகச் செய்யும் இயல்பினர் நாவலர் என்பதற்கு வழுக்கள் யாதுமின்றி அவர் அச்சிட்ட நூல்களே சான்றாகும்.

செய்யுள் இலக்கியங்கள் வேண்டிய அளவு தமிழில் இருப்பதால் அவற்றை இயற்றுவதிலும் உரைநடை நூல்களை இயற்றுவதே தமிழ்மொழியை வளர்ப்பதற்குச் சிறந்தவழி என்று கொண்டு பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் முதலியவற்றை உரைநடையில் எழுதி உதவியதோடு அவர் பல கட்டுரைகளையும் கண்டன நூல்களையும் மாணவர் கற்பதற்கு வேண்டிய உரைநடை நூல்கள் பலவற்றையும் எழுதியுள்ளார். நாவலருடைய உரைநடை பழமையையும் புதுமையையும் ஒருங்கே தழுவிய, முற்போக்குடைய ஒரு சிறந்த நடையாகும்.

பழைய இலக்கணமுறைகளை அனுசரித்து உரையாசிரியர்கள் எழுதிய நடையைப் போன்ற ஒரு கம்பீரமான நடையில் எழுதக்கூடிய ஆற்றல் உடையவராக இருந்தபோதும் தமிழறிவிற் குறைந்தோரும் எளிதிற் பொருள் காணக்கூடிய வகையில் காலத்துக்கு ஏற்றவாறு வழக்கிலுள்ள வழுவற்ற சொற்களையும் பிரயோகித்து, ஒரு சிறந்த நடையினைக் கையாண்டு நூல்களை எழுதினார். அதனால் அவர் வசனநடை கைவந்த வல்லாளர் என்று பாராட்டப்பட்டார்.

(13 புள்ளிகள்)

ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1960ஆம் ஆண்டை அடுத்து தமிழக நாவலைப் போலவே ஈழத்து நாவலிலும் சமுதாய விமர்சனப் பண்பு தலைதூக்கலாயிற்று. கதையம்சம் பின் தள்ளப்பட்டுச் சமூகப் பிரச்சினைகளின் இயங்கியலான வளர்ச்சியே நாவலுக்குப் பொருளாயிற்று. 1950 ஆம் ஆண்டை அடுத்துத் தமிழிலக்கியத்துறையில் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கிய பொதுவுடைமைச் சிந்தனையின் தர்க்கரீதியான வளர்ச்சியாக இது அமைந்தது. 1965ஆம் ஆண்டில் இப்போக்கிற்கு வகை மாதிரியாக செ. கணேசலிங்கனின் 'நீண்ட பயணம்' என்னும் நாவல் வெளிவந்தது. யாழ்ப்பாணத்தில் சாதிப்பிரச்சினை எரிமலை போல் வெடித்துக் குமுறிய காலச் சூழலே இதன் பகைப்புலம் இந்நாவலைத் தொடர்ந்து சடங்கு (1966) போர்க்கோலம் (1969) ஆகிய சாதிப் பிரச்சினை நாவல்களையும் அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளைப் பொருளாகக் கொண்ட செவ்வானம் (1967) தரையும் தாரகையும் (1968) மண்ணும் மக்களும் (1970) நாவல்களையும் எழுதி ஈழத்து நாவலுக்கு ஒரு புதியகட்ட வளர்ச்சியையும் உயர்வாசக இரசனையையும் ஏற்படுத்தினார். தமிழகத்திலே பதிப்பிக்கப்பட்ட இந்நாவல்கள் தமிழ் எழுத்தாளர், திறனாய்வாளர் மத்தியில் ஈழத்து நாவலுக்கு ஒரு கணிப்பைப் பெற்றுக் கொடுத்தன.

இன உணர்வு தலைதூக்கி நிற்கும் எல்லைப்புறமான திருகோணமலையைச் சார்ந்த தமிழ் இளைஞன் ஒருவன் தன் உணர்ச்சிகளுக்கும் சமூகப் பிரச்சினைகளுக்கும் இடையில் ஈடுகொடுத்து நிற்கும் மனவளர்ச்சியைப் பெறுவதைக் கலாபூர்வமாகச் சித்திரிப்பதாக க.அருள் சுப்பிரமணியத்தின் அவர்களுக்கு வயது வந்துவிட்டது. (1973) என்ற நாவல் அமைகின்றது, அரசியல், பொருளாதார அம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட்டதாக சி.சுதந்திரராஜாவின் மழைக்குறி, (1975) என்ற நாவல் அமைகின்றது. தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்ட சூழ்நிலையில் சூழவுள்ள கிராம மக்களுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டைச் சித்திரிப்பதாக திரு. ஞானசேகரனால் குருதி மலை (1979) எழுதப்பட்டது. இந்நாவலை சமூக வரலாற்றுத் தகவல்களைத் தரும் ஆவணம் எனக் கொள்ளலாம்.

1) இங்கு குறிப்பிடப்பட்ட நாவல்களில் இடம்பெற்ற சமூகப் பிரச்சினைகள் எவை?
2) சமூகப் பிரச்சினைகளின் இயங்கியலான வளர்ச்சி என்பதனால் கருதப்படுவது யாது?
3) செ.கணேசலிங்கனின் நாவல் இலக்கியப் பணிகளாகக் குறிப்பிடப்படுபவை எவை?
4) அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகளைப் பேசும் நாவல்கள் எவை?
5) அவர்களுக்கு வயது வந்து விட்டது. என்ற நாவல் எழுந்தமைக்கான பின்னணி யாது?
6) சமூக வரலாற்றுத் தகவல்களைத் தரும் ஆவணமாகக் கொள்ளப்படும் நாவல் எது?

(12 புள்ளிகள்)

3) பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 – 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

அ) மனித குலம் எதிர்நோக்கும் அச்சுறுத்தல்கள்
ஆ) இலங்கையில் தொழிற் கல்வியும் வேலையுலகும்.
இ) தமிழில் மொழிபெயர்ப்பு முயற்சிகள்
ஈ) உடற் கல்வியும் வாழும் சமூகமும்
உ) நினைவு நல்லது வேண்டும்.

(5 புள்ளிகள்)

## பகுதி II

4) அ) சோழர் காலத்தில் எழுந்த காவியங்களைக் குறிப்பிடுக.
ஆ) அவற்றின் பண்புகளை விளக்குக.
இ) பரணி இலக்கியத்தின் அமைப்பினை விளக்கி சோழர் காலத்தில் இப்பிரபந்தம் பெற்ற வளர்ச்சியினைத் தெளிவுறுத்துக.

. *(15 புள்ளிகள்)*

5) அ) நாயக்கர் காலத்தில் எழுந்த பொதுமக்கள் சார் இலக்கியங்களைக் குறிப்பிடுக.
ஆ) அவற்றின் பண்புகளை விளக்குக.
இ) நாயக்கர் காலத்தில் அதிகளவிலான சிற்றிலக்கியங்கள் தோற்றம் பெற்றமைக்கான காரணங்களை விளக்குக.

*(15 புள்ளிகள்)*

6) அ) யாழ்ப்பாண இராச்சியம் தோன்றும் வரையுள்ள காலப் பகுதியில் எழுந்த இலக்கியங்கள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.
ஆ) இக்காலப் பகுதியில் எழுந்த இலக்கியங்களை முழுமையாகப் பேணமுடியாமற் போனமைக்குப் பின்னணியாக அமைந்த காரணிகளை விளக்குக.
இ) ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஈழத்துப் பூதந்தேவனாரின் இலக்கியப் பணிகளை மதிப்பிடுக.

*(15 புள்ளிகள்)*

7) அ) ஐரோப்பியர் காலத்தில் தமிழ்மொழியில் ஏற்பட்ட பன்முக வளர்ச்சிகளை விளக்குக.
ஆ) ஐரோப்பியர் காலத்தில் தமிழில் பத்திரிகைகள் தோன்றி வளர்ந்தவற்றை விளக்குக.
இ) இக்காலத்தில் தத்துவபோதக சுவாமிகளின் இலக்கியப் பணியை விளக்குக.

*(15 புள்ளிகள்)*

8) அ) i) பின்வரும் வாக்கியத்திலுள்ள பொருள் மயக்கத்தை இனங்கண்டு விளக்குக.
முன்னாள் இலங்கையின் கிரிக்கட் வீரர்களுக்கு உயர் பதவிகள் வழங்கப்பட்டன.

ii) பின்வரும் வாக்கியத்திலுள்ள வழுவைச் சுட்டிக்காட்டி வழுவற்ற முறையில் வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.
வினைப் பகுபதங்களில் பகுதியாக அமையும் சொற்கள் கட்டளைப் பொருளில் வரும் வினையடிகளாகவே அமைகின்றது.

iii) பின்வரும் செய்வினை வாக்கியத்தைச் செயற்பாட்டு வினைவாக்கியத்தை மாற்றி எழுதுக.
மக்களின் நலன்களுக்காக அரசாங்கம் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளது.

iv) பின்வரும் வாக்கியங்களை 'செய' எச்சத்தைப் பயன்படுத்தி ஒரு தனி வாக்கியமாக எழுதுக.
கண்ணதாசன் பாடல் எழுதினார்.
விசுவநாதன் இசையமைத்தார்.
சுசீலா பாடினார்.

v) பின்வரும் வாக்கியங்களை அவை இருக்கும் ஒழுங்கிலே பொருத்தமான இணைப்பிடைச் சொற்களைக் கொண்டு இணைக்குக.
தொடர்ந்து மழை பெய்தது.
குளங்கள் நிரம்பவில்லை.
விவசாயம் பாதிப்படையலாம்.

*(10 புள்ளிகள்)*

ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று பற்றிச் சிறுகுறிப்பு வரைக.
அ) இடைநிலைகள்
ஆ) பால் பகா அ∴றிணைப் பெயர்கள்
இ) மாற்றுப் பெயர்

*(15 புள்ளிகள்)*